சுருக்கம்

பகுதி II திட்டம் – 2014–2015 ஆம் நிதி ஆண்டு – நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1,000 பெண் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் கூடுதல் பங்கு மூலதனம் – மானியமாக ரூ.25,00,000/– வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2) துறை

அரசாணை (நிலை) எண்.33 நாள் 02.03.2015

ஜெய வருடம், மாசி 18

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை)எண்.83, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 30.5.2013.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.எண்.61639/2014நவ2, நாள் 22.7.2014, 15.10.2014 மற்றும் 28.01.2015.

---

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014–ஆம் நிதியாண்டிற்கு நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1000 பெண் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/– வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மகளிர் உறுப்பினர்களுக்கு தேவைப்படும் கடன்களை நகரக் கூட்டுறவு வங்கிகளில் சிரமமின்றி பெற்றுக் கொள்ளவும், அவர்களின் கடன்பெறும் திறனை அதிகரிக்கவும், மாநிலத்தில் செயல்பட்டு வரும் 120 நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/–வீதம் கூடுதல் பங்கு மூலதனம் மானியமாக வழங்கிட 2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.25,00,000/–த்தை சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குமாறு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அதன்படி, நகரக் கூட்டுறவு வங்கிகளின் 1,000/– மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் கூடுதல் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/– அளிக்க 2014–2015 ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் ரூ.25,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி மானியத்

தொகை ரூ.25,00,000/–த்தை (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டுமே) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

நிபந்தனைகள் :–

1. இத்தொகை தொடர்புடைய நகரக் கூட்டுறவு வங்கிக்கு மட்டுமே நேரடியாக அளிக்கப்படும்.
2. அரசு அளிக்கும் பங்குத் தொகை மகளிர் உறுப்பினரின் பங்கு மூலதனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அவர்கள் உறுப்பினராக தொடர்ந்து இருக்கும் வரையில் வங்கியில் இருந்து வரும்.
3. எந்தக் காரணத்தை முன்னிட்டும் பங்குத் தொகை நேரடியாக உறுப்பினருக்கு வழங்கப்படமாட்டது.
4. மகளிர் உறுப்பினர், அவர்களின் தகுதியினை இழக்கும் பட்சத்தில் இந்த பங்கு மூலதன மானியத் தொகை, இத்திட்டத்தின் கீழ் உதவி பெறாத பிரிதொரு மகளிர் உறுப்பினரின் பங்கு மூலதனக் கணக்கிற்கு மாற்றப்படும்.
5. இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே கடன் பெற்று முறையாக திருப்பி செலுத்தி கடன் தவணை தவறாத மகளிர் உறுப்பினருக்கு ஒருமுறை மட்டுமே பங்கு மூலதன மானிய உதவி அளிக்கப்படும்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ள வேண்டும் :-

"2425 –00–கூட்டுறவு – 107 கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் – KF –நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனத்திற்கான நிதியுதவியை மானியமாக வழங்குதல் – 11 – மானியங்கள் – 2 – பொதுவான மானியம்". (து.தொ.கு.2425 00 107 KF 1122)

5. இம்மானியத் தொகை ரூ.25,00,000/– த்தை (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மூலம் வழங்குவதற்கு ஏதுவாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் அவர்கள் பெற்று வழங்கிட அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது. இத்தொகை, மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்றும், மேற்கண்ட பகுதி II திட்டத்தின் செலவினம் போக மீதித் தொகை இருப்பின், அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக சரண் செய்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த முன்னேற்ற அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.11232/கூ.உ(ம)நு.பா/2015–1, நாள் 25.2.2015–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை–10.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை)சென்னை–18.
தமிழ்நாடு மாநிலத் தலைமைச் கூட்டுறவு வங்கி, சென்னை–104.
நிதித் (கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு (பி.ஜி.II) துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
நகல்:-
மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு)அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பா. [signature]
பிரிவு அலுவலர்.
3/3/15